ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 22—9—46 | இதழ் 21

# வீடில்லா மக்கள்! :: மக்கள் இல்லாவீடுகள்!

## பலருக்குக் குடியிருக்க வீடில்லை! பலவீடுகளில் குடியிருக்க ஆளில்லை!

இப்படி ஒருநிலைமை இருப்பது, விசித்திரம் என்று அநேகர் எண்ணினதில்லை. அந்தச்சிந்தனையே ஏற்பட்டதில்லை. ஏற்படாததற்குக்காரணம், இதுபோலப்பலப்பல, விசித்திரங்களைக் கண்டு பழக்கப்பட்டுப்போய்விட்டதுதான்.



அனூரின்பெவான் பிரிட்டிஷ்மந்திரி.

பசி இல்லை, உணவு ஏராளமாகக் குவிந்திருக்கும் கோடீஸ்வரன் மாளிகையிலே. பசியுடன் போராடுகிறான் உணவு கிடைக்காது திண்டாடும் உழைப்பாளி.

இருக்கும் ஏராளமான, பலவகையான உடைகளில், எதை அணிவது! எது மாலை நேரத்துக்கு உகந்தது; எது காலை வேளைக்குக் கவர்ச்சியானதாகக் கருதப்படும், இந்தக் கவலை பீரோவைத் திறக்கும் பிரபுவுக்கு. போதுமான ஆடைகிடைக்காத கவலை ஏழைக்கு.

உணவு உடை, குடி இருக்கும் இடம், இந்த மூன்று அத்யாவசியமான "தேவை"களைக் கூட, இன்றுவரை, எல்லோரும் பெறமுடியவில்லை; வருஷமோ 1946; வந்துபோன ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும், தீர்க்கதரிசிகளும், திவ்யபுருஷர்களும், எண்ணிக்கையிலடங்கா; செய்து முடித்த காரியங்களோ அனந்தம்; விஞ்ஞான விசேஷமோ, வானவீதியில் உலவுவதுடன் நின்றுவிடவில்லை, சந்திரமண்டலத்துக்கும் பூமண்டலத்துக்கும் தொடர்பு ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வருமளவு வளர்ந்துவிட்டது.

பாம்புக்கும் புற்றுண்டு; பறவைக்கும் 'கூடு' உண்டு; மனிதனுக்கு வீடில்லை குடியிருக்க— அதிலும், பவுன் நடமாடும்பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்;சீமையில்!

அங்கு குடி இருக்க வீடு கிடைக்காததால், கஷ்டப்படும் மக்களின் தொகை வளர்ந்தது. அவர்களின் கண்களிலே, குடி இருக்க ஆள் இல்லாததால், பூட்டி வைக்கப்பட்டிருந்த பல வீடுகளும் தென்பட்டன. வீடு வேண்டும் அவர்களுக்கு! பூட்டி வைக்கப்பட்டிருந்தவீடுகளுக்கு "ஆள்" வேண்டும் குடி இருக்க! இடையே நின்றது சட்டம்.

ஆத்திரத்துக்குச் சாத்திரம் ஏது என்பர்; அவசியத்துக்குச் சட்டம் ஏதுக்கு என்றனர் அந்த மக்கள். பூட்டுகள் உடைந்தன; கதவுகள் திறந்தன: ஆளில்லா வீடுகளில், வீடு இல்லா மக்கள் குடி ஏறினர்!!

வீடுகள் என்றால் சாதாரண இடங்களல்ல. பெரியபிரபுக்களின் மாளிகைகள்! பிரபு வசிப்பது ஒரு மாளிகையில்; அதே ஊரில் மட்டுமல்ல, வேறு பல ஊர்களிலே அவருக்கு வேறுபல மாளிகைகளும் இருக்கும்; பலவற்றை 'வாடகைக்கு'விடுவார்; இனனம் சிலவற்றைப்பூட்டியே வைப்பார்;வெளியேமட்டும்,உரிமைப்பலகை தொங்கும், 'உல்லாசபவனம்'' சல்லாபச் சீமானுடையது என்று.

இத்தகைய உல்லாசபவனங்களில், இருப்பிடம் தேடி ஊர் சுற்றி அலுத்த வீடில்லார் குடி ஏறினார்கள். போர்ச்சமயத்தில் விமானப்படையினர் இருந்து வந்த ஆபிலாட்ஜ் என்ற பெரிய மாளிகையும்ஜவான்ஹோர் ஓட்டலும், இப்படிவீடில்லாதாருக்கு இடமாகிவிட்டன. வேறு பல மாளிகைகளிலும்,இந்தப் 'படை எடுப்புகள்' நேரிடவே பூட்டி வைக்கப்பட்டிருந்த வீடுகளின் சொந்தக்காரர்கள், வெலவெலத்துப்போயினர்; சர்க்காரும்சீறிப் பார்த்தது, அறிக்கைகள்விட்டுப் பார்த்தது; கடைசியில், சீமான்களின் மாளிகைகளுக்குப் போலீஸ்பாதுகாப்பு அதிகப்படுத்தி வைத்திருக்கிறது.

சீமையில்(இலண்டனில்)மட்டுமல்ல, உலகிலே பலஇடங்களிலும் இந்தச் 'சேதி' பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இந்தக் காரியத்தை, பிரிட்டிஷ் பொதுஉடைமைக்கட்சியே தூண்டிவிட்டது, என்று குற்றஞ்சாட்டுவதைத்தவிர, வேறெதுவும் கூற முடியவில்லை. பிரிட்டிஷ் பொதுஉடைமைக்கட்சியும்,. இதனை மறுக்கவில்லை. கூட்டம், ஊர்வலம்நடத்தி, குடி இருக்கவீடில்லாதார் கஷ்டத்தைப்போக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

அச்சம்கொண்ட சர்க்கார், பிரதமந்திரி, அட்லியின் வீட்டிற்கும், மேரி ராணியார்மாளிகைக்கும்கூட பலமான போலீஸ் காவல் ஏற்படுத்தி இருக்கிறது.

இங்ஙனம், காலியாகக் கிடக்கும் விடுதிகள், மாளிகைகள், கட்டடங்கள் ஆகியவற்றையும் பார்த்துக்கொண்டுஅதேபோது வீடில்லாமல் வீதிசுற்றும் கூட்டத்தையும் பார்த்துக்கொண்டு, ஒரு சர்க்கார் இருக்கிறது சீமையில். சட்டம், ஆளில்லா வீட்டுக்கும், வீடில்லா ஆளுக்கும் இடையே,நின்றுதடுத்துவந்தது. எத்தனைநாள் தடுக்கும்? சீமையிலே, சட்டத்தைச்சற்றேவிலகி இரும்பிள்ளாய் என்று கூறிவிட்டனர். சீமை, என்றால், சட்டம் சமாதானம், ஒழுங்கு ஆகியவைகளைக் கட்டிக்காத்து வரும் ராஜ்யத்தின் தலைநகர். அங்கு இந்தநிலை! மற்ற இடத்திலும், இருக்கவேண்டும், மிக மிகத்தீவிரமாக.

வீடில்லாதாருக்குத்தக்கவிடுதிகளைச்சர்க்கார் அமைத்துத் தர வேண்டும்; அதற்குக்காலம்பிடிக்கும்; அந்த இடைக்காலத்தில், எந்தெந்த இடங்களிலேபூட்டை உடைத்துமக்கள்தாங்களாகவே குடி ஏறினார்களோ, அதுபோல் நடவாதபடி பார்த்துக்கொண்டால் போதாது; அத்தகைய இடங்களைச்,சொந்தக்காரர்களிடம் சர்க்கார் தானாகவே பேசி அந்த இடங்களை,வீடுஇல்லாதாருக்கு இடைக்காலத்திலே,குடி இருக்கும்இடமாக்கித்தரவேண்டும்.

வேறொருவர்வீட்டிற்குள்ளே குடி ஏறினவர்களைச்சர்க்காராக இப்போது வெளியே தள்ளிவிடுவதற்குச்'சட்டம்' இடந்தரவில்லை! வீட்டுச் சொந்தக்காரர்கள், வழக்குத்தொடுத் தாக வேண்டும் தமது வீட்டிலே அன்னியர் புகுந்துகொண்டனர் என்று. பிறகே சட்டம் வேலை செய்யமுடியும். இந்நிலையில்,பிரிட்டிஷ் சுகாதாரமந்திரி அனூரின் பெவான், இப்படி அக்கிரமமாக வீடுகளில் நுழைந்துவிட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டுமென்று கருதி, பூட்டிவைக்கப்பட்ட வீடுகளில் குடி ஏறினவர்களுக்கு,அந்தந்த வட்டாரத்து அதிகாரிகள், மின்சாரம் முதலிய வசதிகள்செய்துதரக்கூடாது என்று உத்திரவு பிறப்பித்துவிட்டார். அதாவது,

(7-ம் பக்கம் பார்க்க)

# வீரகாவியக் கம்பராமாயண வீரம் நமக்கு வராது.

(கைவல்யம்)

(6)

கல்விமந்திரிசெட்டியார்அவர்கள் இராமாயணம் முன்னோர் கொடுத்த பொக்கிஷம்; அது வீர காவியம்; அதிலிருக்கும்வீரமும் ஆண்மையும் வேண்டும்; அதிலிருந்து ஒருபுதுஇந்தியாவையுண்டாக்கப் போகிறோம் என்றார். நாங்கள் இராமாயணத்தைக் குற்றஞ் சொல்லுகிறவர்கள். கல்விமந்திரி சொன்னதும் சரியல்ல என்றுஞ் சொல்கிறோம். நாம் சொல்லும் குற்றம் விசாரித்தறியும் புத்திக்குப் பொருந்துகிறதா? அல்லது மதிக்குப்புறத்தேதள்ளப்பட வேண்டியதா? என்பதைச் சிந்தனைசக்தியுடையவர்கள் ஆலோசித்துப் பார்க்கட்டும்.

ஆதிசேஷன் பாதாளலோகத்தின் அதிபதி. பாதாள லோகத்தில் இரத்தினக் களஞ்சியங்கள் குவிந்து கிடக்கின்றன. இரத்தினங்கள் நமக்கும் வேண்டும். நாம் அவைகளை எடுத்துவரும்படியான வீரம் நம்மிடம்என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. அந்த வீரத்தை இராமாயணம்கொடுத்ததா? இராமர் அவருடையபக்தர்கள் யாருக்காவது கடாட்சித்தாரா? அதுவுமில்லை. பாதாள லோகத்திலிருக்கும் இரத்தினங்களை எடுத்து வரும்வீரஆண்மை உடையவர்களும் அவர்களைப் பற்றின கவிகளும் தான் இராமாயணத்தில் நிறைந்திருக்கின்றன. அவைகளால் நமக்கென்ன பலன்? வாலி முன்னரே பாதாளத்திற்குப் போய் சண்டை போட்டவன். வாலி இரத்தினங்களை வாரிக்கொண்டும் வரலாம். அந்த வழி சுக்ரீவனுக்குக்கூடத் தெரியலாம். அனுமாரும்அதைச் செய்திருக்கலாம். அனுமாரும் பாதாளலோகம் போய் வந்தாரே. கருடபகவானுக்கு இராமர் உத்தரவிட்டால் அவன் ஆதிசேஷனை மூக்கில் கொத்திவந்து இராமர் பாதத்தில் வைத்துவிடுவான். இராமருக்குக் கோபம் வந்து வில்லில் அம்பைப் பூட்டினால் ஆதிசேஷன் பயந்து வந்து இராமர் பாதத்தில் விழுந்துவிடுவான். இராவணனுக்குப்பாதாளலோகத்து இரத்தினங்கள் வேண்டுமானால் மகன் இந்திரசித்தனிடம் சொல்லி விட்டால் பிரம்மாஸ்திரத்தால் ஆதிசேஷனைக் கட்டிவந்து இராவணன் முன்னால் நிறுத்தி விடுவான். பாதாள லோகமும் தெய்வலோகமும் இராட்சதர்களுக்குச் சாதாரணப் போக்குவரத்துடைய இடங்கள். ஒரு இராட்சதன் போனால் எவ்வளவு இரத்தினங்கள் வேண்டுமானாலும் வாரிக்கொண்டு வரலாம். இராவணன் பேசாக்கேட்டால் ஆதிசேஷன் படமெடுத்து ஆடமாட்டான். இந்த வீரங்களும் இருந்து [illegible] மறுக்கவில்லை. அந்த வீரமும் ஆண்மையும்நமக்கெப்படிவரும்? நமக்கென்ன செய்தது? இராமருக்கு அநேகபக்தர்கள் இருந்தார்கள். இன்னும் அநேகர் இருக்கிறார்கள். கூடப்பேசின பக்தர்கள், அருள் பெற்றபக்தர்கள், இராமசைதன்யமே அவதாரமாக வந்தபக்தர்கள் இன்னும் பலவிதமான பக்தர்கள் இருந்தார்களே. எந்தப்பக்தனுக்காவது அந்தவீர ஆண்மைவந்திருக்கிறதா? அருள் அளித்தாரா? இராமரோ உடலை இங்கே போட்டுவிட்டு வைகுண்டம் போய் விட்டார். சிரஞ்சீவியாகத்தானே அனுமார் இன்றும் இங்கே இருக்கிறார் என்பது பக்தர்களின் வீர நம்பிக்கை. அவராவது அந்தவீர ஆண்மையின் வழியைச் சொன்னாரா? அனுமான் உபாசனையுடையவர்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே அவர்களுக்காவது அனுமார் ஆசீர்வதித்தாரா? சனிமாலையிலும், ஞாயிறுகாலையிலும், பெரியதிருநாட்களிலும் சேவை தரும் கருடபகவானாவது அந்த வீர ஆண்மையைக் கற்றுக் கொடுத்தாரா? இல்லையே! கற்றுக்கொள்ளும் மார்க்கத்தையும் கல்விமந்திரி சொல்லவில்லை. பாற்கடல், நெய்க்கடல், இருந்தும் நமக் கென்னபயன்? நமக்கும் இரத்தினங்கள் வேண்டும், வேண்டுமானால் பூமியைத் தோண்டிப், பாறையை உடை[illegible] அழகு பெறச்செய்து கொள்ள வேண்டும். பூமிக்குள்இரத்தினங்கள் இருக்குமிடத்தைக்கண்டு பிடிப்பவர்கள் தொழிலாளிகள். இராமாயணத் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறவர்களுக்குக் கல்விமந்திரி சொல்வதுபோல் இராமாயணம் முன்னோர் கொடுத்த பொக்கிஷம் என்பதில் சந்தேகமில்லை. மற்றவர்களுக்கு என்ன பலன்?

இராமர், இராவணன் இவர்களுடைய ஆண்மைகளைச் சொன்னேன். அவைகள்நமக்கு உபயோகப் படாதென்றும் சொன்னேன். இப்போது குரங்குகளின் வீர ஆண்மையும், பிராமணச் சாபத்தின் வீரத்தையும் சொல்லுகிறேன்

குரங்குகளுக்கு இராசாவாலி, வானரசேனை எழுபதுவெள்ளம் ஆனை ஆயிரம், தேர்பதினாயிரம், அடல்பரி ஒருகோடி, வீரர்கள் ஆயிரக்கணக்கில். இப்படி நூறு கொண்டது ஒரு பதாதி, பதாதி நூறுகொண்டது ஒரு அக்ரோணி அக்ரோணி நூறுகொண்டது ஒருவெள்ளம். இப்படி எழுபது வெள்ளம்குரங்குசேனை. இராட்சதசேனைமட்டும் இரண்டாயிர வெள்ளம். இத்தனை சேனைகளும் அந்த இலங்கையில் எப்படித் தங்கினவோ? சண்டைபோட்ட களத்தின் அளவுதான் என்னவோ? ஆகாரம் எங்கிருந்து கிடைத்ததோ? காமதேனுவும், [illegible] கொடுத்தி[illegible] இமயமலையின் அடி[illegible] னமிருந்தது. அதிலுள்ளகுளத்தில் ஒரு ஆண்குரங்கு தவறி விழுந்துவிட்டது. அது பெண்குரங்காய்விட்டது. இந்தப்பெண்குரங்கைத் தெய்வலோகத்திலிருந்து தேவேந்திரன் கண்டு மோகித்தான். உடனே வாலி பிறந்தான். அந்தப்பெண்குரங்கையே சூரியன் கண்டுமோகிக்க உடனே சுக்ரீவன் பிறந்தான். பார்வதியும் பரமேஸ்வரனும் குரங்கு ரூபமெடுத்து அநேக காலம் சுகித்திருந்தார்கள். அந்தச்சுகரசத்தை வாயுபகவான் எடுத்து வந்து அஞ்சனை என்ற ஒரு இராட்சதப் பெண்ணுக்குக்கொடுத்தான். அவள் அதைச் சாப்பிட்டு அனுமானைப் பெற்றாள். சாம்புவந்தர் பிரம்மாவின் அவதாரம். இப்படியே குரங்குகளெல்லாம் தேவ அவதாரங்கள். இராமர் தேவர்களிடம்தான் இராமராக அவதாரம் எடுக்கப்போவதாகவும் அவர்களைக்குரங்குகளாகக்கிஷ்கிந்தையில் இருக்கும்படியும் சொன்னார். குரங்குகள் என்றால்சாதாரணக்குரங்குகளா? தேவ அவதாரக்குரங்குகளல்லவா? கைலையங்கிரியிலிருந்துபூலோகத்துக்கு வந்து நமது கோயில்கள்பலவற்றுள் எழுந்தருளியிருந்து கொண்டு நமக்குக்காட்சியளிக்கும் சிவபெருமானின் சுகானுபவ[illegible] அல்லவா! ஒரு குரங்கு செத்தவர்கள் பிழைப்பதற்கு மருந்து கொண்டுவரச் சொல்கிறது. அது இருக்கிற இடமும் வழியும் சொல்லி அனுப்புகிறது. ஒருகுரங்குமருந்துள்ள மலையை வேரோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு வருகிறது. அந்தக் குரங்கைத் தெய்வமாக்கினோம், கும்பிட்டோம், காங்கிரஸ் கொடியிலும் ஏற்றினோம். அடைந்தபலன் என்ன? அந்தக் குரங்கு இன்னும் உயிரோடிருப்பதாகத்தானே கம்ப இராமாயணப்பொக்கிஷம் சொல்கிறது? அந்தச்சஞ்சீவி மருந்தை நமக்குச்சொல்லிக்கொடுத்ததா? அதற்கு வழிதான் காட்டிற்று? எனவே அந்த வீரஆண்மை எல்லாம் நமக்கு உபயோகப்படாதென்று சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன்.

இனிப்பிராமணச்சாப வீரத்தைப்பார்ப்போம். விஷ்ணுவே இராமராக அவதாரமெடுக்கக் காரணமாயிருந்தது ரிஷிகள் சாபம்' என்று இதிகாசங்கள் சொல்லுகின்றன. அந்த ரிஷி அப்படிச்சாபம் தந்தார், இந்த ரிஷி இப்படிச் சாபம் கொடுத்தார். தேவேந்திரனுக்குச் சாபம் கொடுத்தார், வைகுண்டம்சென்றார், விஷ்ணுமரியாதை செய்தார், இலட்சுமியை ஆசீர்வதித்தார், என்கிற கதைகளையேஇதிகாசப்புராணங்களில் எழுதிப் பிரசுரம் செய்து மக்களின் மனதில் செலுத்திவிட்டமையால் மக்கள் பிராமணச் சாபம்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ணன்—பாகவதர்

★

திங்களெனத் தாரகையாம் நடிகர்களின் நடுவினிலே
திகழ்ந்து வானில்
தங்குபுயல் தனில்மறைந்த தண்மதிபோல் தனிச்
சிறையில் தங்கி வாழ்தல்
மங்கலிலா கிருஷ்ணனுக்கும் பாகவதர் பண்பினுக்கும்
மாண்பு தானோ!
பொங்குகின்ற அவர் நடிப்பைப் பாட்டுடனே நாமென்று
போதுவில்காண்போம்?

எந்தவிதச் சிறைதனிலோ அவர்களிந்த இருக்கின்றார்
இனிது நாமே
வந்ததென்ன நமக்கென்று வளர்வயிற்றுக் குணவளித்து
வாழ்தல் நன்றோ?
பந்தமித தமிழருக்குப் பண்பல்ல மற்றவரைப்
பழியே சூழும்
எந்தவிதம் ஆனாலும் அவர்களிடம் பேதமிங்கு
என்றும் வேண்டாம்

பாட்டாலும் நடிப்பாலும் நமக்கன்றே விருந்தளித்தார்
பண்பின் மிக்கார்!
கேட்டவரும் பார்த்தவரும் கிளர்ச்சியுடன் புகழ்கின்றார்
கெடுதல் இல்லாப்
பாட்டாளர் நடிப்பாளர் அவர் நடிப்பும் அவர்பாட்டும்
பாவலர் வேண்டும்
கூட்டாக நல்வழியில் நாம்முயன்றால் வெளிவருவார்
குறைவே இல்லை.

S. S. அருணகிரிநாதர்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்களில், பலர் பாக்கியை அனுப்பாமலும், கடிதங்களுக்குப் பதில் எழுதாமலும் இருப்பதால், 29-9-46-ல் இருந்து பாக்கிவைத்திருக்கும் ஏஜண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்பதைக்கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,


# திராவிட நாடு

காஞ்சி] 22—9—46 [ஞாயிறு


## வனஸ்பதி

★

உலகை மிரட்டிய மாவீரன் ஜூலியஸ்சீசரை, ஒருநொடியில் மயக்கிய உல்லாசி, கிளியோபாட்ரா, எகிப்திய நாட்டு அரசி, அழகி, என்பதுமட்டுமே பலருக்குத் தெரியும், ஆனால் அவள் அழகை அதிகப்படுத்திய அற்புதமான 'முத்து'க்காதணி இருந்ததும் அந்த "முத்துக்கள்" தமிழ் நாட்டவரிடம் எகிப்து விலை கொடுத்து வாங்கினவை என்பதும் பலருக்குத் தெரியாது. இன்று, தமிழன் கரும்பு, ரப்பர், தேயிலைத் தோட்டக் காடுகளுக்குக் கூலிவேலை செய்வதற்குப் புறப்படமட்டுமே கப்பலேறுகிறான். ஓர் காலம் இருந்தது, அவன்வீரனாய், விவேகியாய், வணிகனாய், மரக்கலம் செலுத்தி ரோம்வரை, தமிழகத்தின் கீர்த்தியைப் பரப்பிய பண்பு மிகுந்திருந்தசிறப்பு. அவை, இலக்கியவகுப்புக்குமட்டுமே இன்று பயன்படுகிற நிலை இருக்கிறது; மக்கள் மன்றத்திலேகூட இந்நிலை பற்றிக்கூறுவார் இல்லை.

வரலாற்றிலும், (ஷேக்ஸ்பியரின்) இலக்கியத்திலும் இடம் பெற்ற இலாவண்ய கிளியோபாட்ராவின் காதணிமட்டுமல்ல, ரோம்நாட்டரசி லோலா என்பவளும், வேறு வேந்தர் பலரும் அவர் தம் வேல்விழி மாதரும், விரும்பி, கேட்டவிலை கொடுத்துப்பெற்றனர் தமிழகம் அனுப்பியமுத்துகளை. எகிப்து நாட்டுக்குமட்டும், ஆண்டுதோறும், 120 கப்பல்கள் செல்லுமாம் தமிழ்நாட்டுப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு. கடல் வாணிபம் அவ்வளவுஓங்கிவளர்ந்திருந்தது. ரோம்நாடு பத்துஇலட்சம்பவுன் பெறுமானமுள்ள தங்கநாணயங்களை இந்திய உபகண்டத்துக்கு அனுப்பிவந்தது, வியாபாரத்தொடர்பின் காரணமாக. இதிலேபெரும்பகுதி தமிழ் நாட்டுக்கு வந்தது! இவை, மச்சபுராணமோ, மகாலிங்க புராணமோ அல்ல; வரலாறு. அத்தகைய தமிழகம், இன்று, வடநாட்டுக்கு மார்க்கட்டாகிவிட்டது, வறண்டுவருகிறது, வகையற்றோரின் இடமாகிவிட்டது. மார்வார், குஜராத் முதலாளிமார்களின் வேட்டைக்காடாகிவிட்டது. இவ்வளவும் 'தேசியத் திரை'யினால்மறைக்கப்படுகிறது.

நமது நாட்டுத் தொழில்வளத்தைப்பெருக்காமல், வெளியாருக்கு விருந்திடும் போக்கிலே, இப்போது, பிர்லா கம்பெனியாருக்கு, வனஸ்பதி தொழிற்சாலை துவக்கவழி செய்துதந்துவிட்டனர். இதுகண்டு பலரும் திடுக்கிட்டனர், முதலமைச்சர் பிரகாசத்தைக் காரணம் கேட்டனர்; தொழில்மந்திரி தோழர்கிரியைக் கேட்டனர். விசித்திரமானபதில் கிடைத்தது. பிர்லாகம்பெனியார் வரி கட்டுவார்களாம்! அதனால் சர்க்காருக்குப்பணம் கிடைக்குமாம்! இதுவே பதில். இங்கே, பலர், அதே தொழில் நடத்த அனுமதி கோரினர்! டில்லி நோக்கிச்சென்றகோரிக்கைகள் முடங்கிக்கிடக்கின்றன. இந்நிலையிலே பிர்லாவின் படைஎடுப்பு, தங்குதடையின்றிநடைபெறுகிறது. டில்லியின் அனுமதி கிடைத்துவிட்டது, நமது மந்திரிமார்கள் கூறுகிறார்கள், "பிர்லா கம்பெனிக்கு லைசென்சு நாங்கள் தரவில்லை; டில்லி தந்துவிட்டது" என்று. ஏன் இவர்கள், டில்லி சர்க்காருக்குத் தங்கள் கண்டனத்தை அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்கக்கூடாது என்றுகேட்கிறோம். நமது நாட்டுவளத்தையும், தொழில் திறனையும் சுரண்டிச்சுகபோகிகளாவதற்காக, வடநாட்டிலே, ஏற்கனவே நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை, பல்வேறு வகையான தொழில்களை நடத்தி, பலகோடி ரூபாயை இலாபமாகக் குவித்துக்கொண்டு, சிற்றரசர்கள் கண்டு மயங்கும் விதமான சிங்கார மாளிகைகளைக் கட்டிக்கொண்டு, அரசியலையே தமது "கட்டியக்காரன்" ஆக்கிக்கொள்ளும் அளவுக்குப்பிரமாண்டமான உருவெடுத்துள்ள பிரபுக்கள், இங்கே நுழைவது கண்டு, இந்த மந்திரிமார்களின் மனம் பதறவேண்டாமா! வடநாட்டவருக்கு இங்கு, செல்வத்தைச்சுரண்ட இடங்கொடுத்துவிட்டு, இந்த மந்திரிமார்கள், எப்படி, எதைக்கொண்டு, இங்குள்ள ஏழைஎளியவர்களைக் காப்பாற்றப்போகிறார்கள்? நாளைக்கொரு ஆலை அங்கே, இங்கேவீட்டுக்கு ஒரு ராட்டை! இதுவா, வாழவைக்கும்முறை? நமது மந்திரிமார்களும், அவர்களின் ஆதீனத் தவர்களும், 'இந்தப்பிர்லா படைஎடுப்பைக் கண்டிக்க முன்வந்தால், டில்லி, இவர்களையும்மீறி நடக்குமா! நடக்குமெனில், நமக்கு டில்லி ஏன்? டில்லிப்பட்டணத்திலே பெரிய பெரியசாம்ராஜ்யாதிபதிகள் கொலுவிற்றிருந்தபோதெல்லாம், நருமதை நதிக்கு இக்கரை நாட்டவராகிய நாம், வளத்தோடு வாழ்ந்துவந்தோமே, இனியும் அப்படி இருக்க முடியாதா! மந்திரிகளின் பேச்சிலே, குறை கூறுபவர்களின் வாதத்தை உடைக்கும் தந்திரம் இருக்குமளவு, நாட்டுப்பற்று இல்லையே.

தொழில் மந்திரி கனம். கிரி, அவர்கள் எதிரிலேயே, ஒரு சொற்பொழிவின் போது, தோழர் திருமல்ராவ் என்பவர், "தென்னாட்டை வடநாட்டார் சுரண்டுவதற்குஅனுமதிக்கவேண்டாம்" என்று கூறினார். மந்திரி கிரி வேறு விஷயங்களைப்பற்றிப் பேசினாரே தவிர, இந்தச்சுரண்டலை நாங்கள் தடுப்போம் என்று உறுதி கூறவில்லை. வடநாட்டவர், தமது பணம், இங்கு கிடைக்கும் பணம் இவ்வளவும் திரட்டி இங்குதொழில் நடத்தி, இலாபத்தை வடநாட்டுக்குக்கொண்டுசெல்கின்றனர். பழையநாட்களிலே, ஏதேனும் ஓர் படை எடுப்பின் மூலமாக, ஒருநாட்டுச் செல்வத்தை மற்றோர்நாடு கவர்ந்துசெல்லமுடிந்தது; இப்போது அந்தச்சிரமம் இன்றி, வியாபாரக்கோமான், தமது டெலிபோன், தந்தி, சம்பாஷணைகள்மூலமாகவே, கோடி கோடியாக ஒரு நாட்டுப் பொருளை எடுத்துச்செல்ல வழி கிடைத்துவிட்டது.

வடநாட்டார் இத்துடன் திருப்தி அடையவில்லை. அங்குள்ள மார்வார் குஜராத் முதலாளிகளின் கண்ணோட்டம், இன்று தென்கிழக்கு ஆசிய நாடுகள் பூராவிலும் பரவியிருக்கிறது. ஜாவா, சுமத்ரா, போர்னியோ, மலாய், இந்தோ—சீனா, அன்னம், என்னும் பல்வேறு இடங்களிலேயும் தமது வியாபாரவலையைவீசுகிறார்கள்; பாகிஸ்தான் கிளர்ச்சி கிளம்பிவிட்டால், மத்தியக்கிழக்கிலும் கண் பாய்ந்திருக்கும், ஆப்கனிஸ்தான், ஈராக் ஈரான், ஆகிய பகுதிகளிலும், வியாபாரத்தைப் பரப்பிவிடத் திட்டம் தயாரிப்பர்; வெற்றியும் பெறுவர்.



வடநாட்டுமுதலாளிகள், இத்தகைய 'வெற்றி' பெறுவதற்கான சகல வழிகளையும் அமைத்துக் கொண்டனர். அவர்கள் 'முறை' 'திறமை,' 'போக்கு' வெள்ளைக்காரரிடமிருந்து கற்றுக்கொண்டனர். அரசியல் துறையிலே செல்வாக்குத்தேடிக் கொள்ளும் விஷயத்திலே, வடநாட்டு வணிக வேந்தர்கள், மேனாட்டவரையும் தோற்கடித்துவிட்டனர் என்றுகூறலாம்.

நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். காங்கிரசின் துவக்ககாலமுதலாகவே, 'தலைமை நிலையம்' — திட்டம் தயாராகும் இடம் — வடநாடாகிவிட்டது. எனவே, தமிழ்நாடு, விடுதலைக்கிளர்ச்சியிலே ஈடுபட்டது, வடநாட்டுக்கு இலாபமாகிவிட்டது. சீமைச்சாமான் பகிஷ்காரம், சுதேசி இயக்கம், வடநாட்டுக்குச்சாதகமான நிலைமையை ஏற்படுத்திவிட்டது. அசோகனின் காம்தட்டிய காலத்திலும், திறக்கப்படாததிராவிடநாட்டுக் கதவு, திறக்கப்பட்டு, வடநாட்டுப்பாகை அணிந்தோர் நுழைந்தனர், வாகை சூடிக்கொண்டனர். இங்கு நாம் இளித்தவாயரானோம்.

காந்தீயம், எளியவாழ்க்கையைக்கற்றுக் கொடுத்தது, கிராமீயசேவையை வலியுறுத்தி, குடிசைத்தொழிலில் ஆர்வமும் கற்றுக்கொடுத்தது. எனவேஇங்கு, ராட்டை சுழன்றது, குத்துவிளக்கு எரிந்தது, கைக்குத்து

(அடுத்த பக்கம் பார்க்க)

## வனஸ்பதி

3-ம் பக்கத் தொடர்ச்சி

அரிசி மிகுந்தது; ஆனால் அதே காந்தீயபோதனையிருந்தும், காந்தியார் வாழும் வடநாட்டிலேயோ, வியாபாரிகள், விமானங்களில் ஏறிவெளிநாடு சென்றனர், மின்சார சக்தியை வேலைக்கு அமர்த்திக்கொண்டனர், ராஜபுதனப்பாலைவனங்களை எல்லாம், பாரிஸ், இலண்டனாக்கினர்.

இந்தச் சூக்ஷமத்தை இங்குள்ள தேசியவாதிகள் உணரவில்லை. இன்றும் அனேகர் உணர மறுக்கின்றனர்.

காந்தியாரைக் கண் கண்ட தெய்வமாகக்கொண்டாடுவர் வடநாட்டிலே, 'மெஷின் மனிதனைக்கெடுத்தது என்ற தத்துவத்தையும்'' கதரே தாரகம் என்ற சித்தாந்தத்தையும் போதிக்கும் காந்தியாரைக் கடவுளாகக் கொண்டாடும் வடநாட்டிலே, எப்படி டாட்டாவும், பிர்லாவும், பஜாஜூம், தலாலும், ஆலைகளையும் பெருத்த தொழிற்சாலைகளையும்வைக்கமுடிந்தது? எப்படி இவர்கள், காந்தியாரின் சீடர்களாகவே இன்றும் வாழ முடிகிறது?

இதனை எடுத்துக் காட்டுபவர் திராவிடர் கழகத்தார், என்று கோபப்பார்வையுடன் நோக்காமல் ஆர அமர யோசிக்கும், எந்த நேர்மையான காங்கிரஸ் வாதியும் இந்தநிலையைக் கண்டு, மனம் பதறாமல் இருக்கமுடியாது.

காந்தீயப்போதனையை 'அபின்' ஆக்கித்தமிழகத்திலேகொடுத்துவிட்டு, தமிழரைச்செயலற்றவர்களாக்கி, அந்த நிலையைச்சாதகமாக்கிக்கொண்டு வடநாட்டார் மேனாட்டவர் சொந்தம் கொண்டாடும் அளவுக்கு, 'பங்காளிகள்' ஆகும் அளவுக்கு தொழில் துறையில் வேக வேகமாக முன்னேறிவிட்டனர்.

இங்கே நமது நாட்டவர்கிராமப்புனருத்தாரணத் திட்டத்தைத்தயாரித்துக் கொண்டுள்ளனர்; நமது முதலமைச்சரோ, வீட்டுக்கு ஒரு ராட்டையைத் தந்துவிடுகிறேன் என்கிறார், இதே போது, வடநாட்டவர், இங்கே வனஸ்பதி துவக்குகிறார்கள், அவர்கள் வரி செலுத்துவார்களல்லவா என்று ஆசைமொழி கூறுகிறார் மந்திரியார்.

வெளிநாட்டுச் சரக்கினிடம் இங்குள்ள மக்களுக்குவெறுப்பு ஏற்படச் செய்தாகிவிட்டது. வெளிநாட்டுச் சரக்கை உபயோகிப்பதே தேசபக்திக்கு இழிவு என்ற நிலை உண்டாகிவிட்டது.

வடநாடு, தென்னாடு என்ற பேதம் கூடாது, நாமெல்லாம் ஒரே நாட்டுமக்கள் பாரததேசம் என்று சொந்தம்பாராட்டியாகிவிட்டது. இந்தச் 'சொந்தம்' காரணமாகக்கொண்டு, மலை மலையாகப்பொருளை வடநாட்டிலே உற்பத்திசெய்து, இங்கே அனுப்பியாகிவிட்டது. இங்கே இயற்கைச்செல்வம்மங்க, உள்நாட்டு "முதல்" தூங்க, மீறி, பர்மா போனால் அங்கு சூரியகத்தி மிரட்டுவதுகண்டுஏங்க, தொழிலில்லாததால்மக்களிடை துயரம் தேங்க, அதனைத் தீர்த்துக் கொள்ள தேயிலைக்காட்டுக்கு ஓடி, உடல்கெட்டுக் காலும் வயிறும் வீங்க, அதனைச்சிந்து ஆக்கி நமது நடிகர்கள் இசை முழங்கக்கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தநிலை நீடிக்கவிடலாமா! திராவிட கழகத்தாரை அல்ல, நாம்கேட்பது, காங்கிரசாரைக்கேட்கிறோம் — அதிலே உள்ள தமிழரைக்கேட்கிறோம்—நேர்மையாளர்கள் அனைவரையும் கேட்கிறோம்—நீதியின் பேரால் கேட்கிறோம் — ஏழைஎளியவர்களின் சார்பிலே நின்று கேட்கிறோம்—இனியும்பிறக்க இருக்கும் நமது பின் சந்ததியாரின் பெயர் கூறிக்கேட்கிறோம். காவிரியும்பெண்ணையும், கேலிச்சிரிப்புடன்தான் பாய்ந்தோடுகிறது. நமது சுரங்கங்கள், நம்மைக் கையாலாகாதவர்கள்என்றுகடுமொழிகூறுகிறது. நமது பின் சந்ததி நம்மை, வடநாட்டுக்கு அடிமைகள், வளம் இருந்தும், பயன்படுத்தும் வகையற்றவர்கள், என்று கண்டிக்குமே! இதற்காக வேனும், யோசித்து ஆவன செய்யவேண்டாமா, காங்கிரஸ் தமிழர்கள் என்று கேட்கிறோம்.

மேனாட்டவரின் இந்தநிலையை அடைந்ததோடு இல்லை, வடநாட்டு வணிகர்கள். இன்று பிரிட்டிஷ், அமெரிக்கக்கோடீஸ்வரர்களுடன் 'கூட்டு' சேர்ந்து பலதொழில்களைத் துவக்கிஉள்ளனர். நிலை அவ்வளவு உயர்ந்துவிட்டது.

உயர்ந்த நிலையுடன் அவர்கள் திருப்திஅடையவில்லை, நம்நாட்டு வணிகவேந்தர்கள், வியாபாரக் கோமான்கள், திருமலைதிருப்பதி, பூரிஜெகன்னாத், காசிகயா, கண்டி கதிர்காமம் சென்று, 'வரம்' கேட்டுக்கொண்டிருக்கும்வேளையிலே, வடநாட்டு முதலாளிமார் இலண்டன், வாஷிங்டன், பாரிஸ் பிரஸ்ஸல்ஸ் ஆகிய 'க்ஷேத்திரங்களுக்குப்போய்,'' முருகன், முக்கண்ணன், கண்ணன், காந்திமதி ஆகிய தேவ தேவியரை அல்ல, மோட்டார் விமானம், இரும்பு எஃகு, ரசாயனம் கண்ணாடி, ஆகியபலவிதமானதொழிலிலே உள்ள நிபுணர்களைக் கண்டுபேசித் தொழில் முறை, நுண்ணறிவு, டெலிவரி வகை, அமைப்புமுறை ஆகியவைபற்றித்தெரிந்துகொண்டு வருகின்றனர். தாளச்சத்தமும் மேளச்சத்தமும் கேட்டு ரசிக்கும் நமது நாட்டு 'தொழிலில்லா இரும்புப் பெட்டிக்காரர்கள்'' அறிவார்களா இந்தவடநாட்டு வணிகர்கள், அங்கே இருந்து பெற்று வரும் 'வரம்' இந்த உபகண்டத்துச்சூத்திரக்கயிறை அவர்களிடம் சேர்த்துவைக்கும், பிறகு, அந்தக்கயிற்றுக்கு ஏற்றபடி இங்குள்ளவர்கள் ஆடும் பொம்மைகளாகிவிட நேரிடும் என்றசூக்ஷமத்தை.

தம் நாட்டு மக்களை உதாசீனம் செய்வதும் வடநாட்டாரை அளவுக்கு மீறித்தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுவதும் தமிழ் நாட்டாருக்கேயுள்ள ஒருபிரத்யேகமானகுணம். கல்கத்தாவிற்குச் சென்றால், "சித்தரஞ்சன் அவென்யூ" "பெபின்பால் ரோட்" என்று பார்க்கிறோம். நம் சென்னையிலோ 'ரானடேஹால்,' 'கோகலேஹால்,' 'நேருகபே,' 'திலகர் வாசகசாலை' என்று காண்கிறோம். அம்மட்டுமல்ல. "பண்டிதமோதிலால் நேருவைப்பறிகொடுத்தோமே" என்று ரிக்கார்டு எடுத்துக் கலியாணவீடு உள்பட எல்லா இடங்களிலும் அனவரதம் ஒப்பாரிவைக்கத் தயாராயிருக்கிறோம்!

நமது சென்னைப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் பாருங்கள். அத்துடன் வடநாட்டுப் பேப்பர் எதையாவது எடுத்துப் பாருங்கள். வடநாட்டைப்பற்றிய செய்திகளும் வடநாட்டார் விட்ட அறிக்கைகளும் பஞ்சமில்லாமல் சென்னைப்பத்திரிகையில் இடம் பெறும். வடநாட்டுப் பத்திரிகைகளில் தென்னாட்டு சமாசாரம் அனேகமாகஇராது.

"இந்தமாதிரி நான் எழுதிக் கொண்டே போவேன். ஆனால் உங்கள் பத்திரிகையில் இடம் இருக்கவேண்டும்; இடம் இருந்து நீங்கள் பிரசுரித்தாலும் ஆமாம்! என்னதற்புகழ்ச்சி வேண்டியிருக்கு, சார்? வடக்கத்தியான் எங்கே, நாம்எங்கே? அவங்க சமாசாரமே தனிதான், சார்! சும்மா பேசிவிட்டால் போச்சா?'' என்று சொல்வதற்குவேண்டிய சிகாமணிகள் தமிழ் நாட்டில் இருப்பார்கள்.

"கல்கி''யில் ஒருதோழர்வடக்கத்தியர் விஷயம் என்று தலைப்பிட்டு தீட்டிய திருமுகத்திலே சில பகுதிகளை மேலே வெளியிட்டிருக்கிறோம். திராவிடநாடு திராவிடருக்காகவேண்டும் என்பதற்கு நாம் காட்டும் பலகாரணங்களிலே ஒன்று, இந்தியா எனும் ஒரு அமைப்பிலே நாம் இணைந்திருக்கும்வரையில், சகல துறைகளிலும், வடநாட்டார் ஆதிக்கம் செலுத்துவார்களேயொழிய, திராவிடத்துக்குஉரிய நிலை கிடைக்காது என்பதாகும். வடநாட்டார், சரிதகாலத்துக்கு முன்பிருந்தேயுங்கூட, தென்னாட்டவரைத் தாழ்த்திவைப்பதையே நோக்கமாக இருந்திருக்கிறார்கள்என்பதற்குஎண்ணற்ற ஆதாரங்கள் உள்ளன. முடியுடைமூவேந்தர்கள் காலத்திற்குப்பிறகு, திராவிடத்தின் பிடி தளர்ந்துவிட்டது, நடைகுன்றிவிட்டது, கலையும் வாழ்வும் கருகின, செல்வம் தேய்ந்தது, சீர் அழிந்தது. இம்மட்டோ! திராவிடத்திலே தன்னம்பிக்கையும் தேய்ந்தது. பண்டு வாழ்ந்ததும் மறந்தனர்.

இந்நிலையில் துவக்கினர்வனஸ்பதியை, பிர்லா. இதற்குச் சமாதானம் கூறுகிறார் பிரதமர் பிரகாசம், இந்த நாட்டிலே நாம் வாழ்கிறோம். இதனை எடுத்துக் கூறினாலோ, தேசத்துரோகிப் பட்டம்! எதிர்க்கத் துணிந்தாலோ, 144, 151, எனும்தாக்குதல்கள்

ஆனால் நமக்கு இருக்கும் நம்பிக்கை நசித்து விடவில்லை!— மாறாக, வளர்கிறது. காரிருள் கப்பிய இடத்திலே, கீழ்க்கோடியில் கொஞ்சம் வெளிச்சம் தெரிகிறது. காங்கிரசுக்குள்ளேஇருக்கும் சிலருக்கே, இன்று இந்நிலை பிடிக்கவில்லை—நெஞ்சு குமுறுகிறது. 'கல்கி'யின் கட்டுரை இதற்கோர் சான்று. தொழில் மந்திரிகிரியின் முன்பாகவே "வடநாட்டார் தென்னாட்டாரைச் சுறண்டுகிறார்கள். இதனைத் தடுக்கவேண்டும்'' என்றுதோழர் திருமல்ராவ் பேசியது மற்றோர் சான்று. வனஸ்பதியை, பிர்லா துவக்க இடமளித்ததைக் கண்டித்துச் சில எம். எல். ஏ.க்களே கையொப்பமிட்டு, முதலமைச்சரிடம் 'மகஜர்' கொடுத்தது மேலுமோர் சான்று. விளக்கத்தோடு கூடியவேறோர் சான்றும் தருகிறோம், காண்க.

"வர்த்தகத்துறையில் ஆங்கிலேயரிடமிருகது பெற்ற உரிமைகள் அனைத்தும் பம்பாய் துறைமுகத்தோடு நின்று விட்டன.

தமிழர்க்கே உரியதாயிருந்தது கடல்தாவு கலை. ஆங்கிலேய அதிகாரத்தார் அதைப்பறித்து நம்மைப் பாழ்படுத்தினர். இழந்தஅதிகாரத்தைப் பெற்றே தீருவேன் என்று வீறுகொண்டெழுந்துசுதேசி கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்தார் தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. ஆங்கிலவர்த்தகக் கூட்டத்தார் அடக்குமுறைகொண்டு அவரை அழிக்க முயன்றனர். முன்ஜென்ம பாபத்தைக் கழிக்கமற்றோர் ஜென்மம் வாய்க்கும் என்பர் சமயவாதிகள். ஆனால் இந்த ஜென்மத்தில் ஏகாதிபத்யத்தை எதிர்த்தபாபத்திற்காக இருஜென்ம தண்டனை அடைந்தார் சிதம்பரம் பிள்ளை. கப்பற்றொழிலை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்ற அன்று போராடித்துன்பமுற்றவர் தமிழர் அன்று சிதம்பரனார் போராடிய நாளில் உறங்கிக்கிடந்த வால்சந்த் ஹீராசந்துகள் இப்போது கப்பற்றொழிலில் பணத்தை வாரிக் குவிக்கின்றனர்."

இந்தவிளக்கம்—வேதனைவிருந்து—தேசிய நாதத்தோடு கூடியது. தோழர் சிவஞான கிராமணியார் தீட்டும் 'தமிழ்முரசு' இதழில் இருப்பது.

இத்தகைய "குமுறல்கள்'' காங்கிரசுக்குள்ளே தோன்றிவிட்டது மட்டுமல்ல — வளருகிறது. இந்த நிலையையும் மறந்து, முதலமைச்சர், அச்சமும் கூச்சமுமின்றி, "பிர்லா, கம்பெனி வைத்தால் என்ன? வரிகட்டுவார்கள். அது நமக்கு இலாபந்தானே, என்று சொத்தைவாதம் செய்கிறார்.

இந்த வடநாட்டுப்படையெடுப்பைத் தடுக்கும் வீரர்கள் இல்லையா! இதன் விளைவுகளைத் தெரிந்துகொள்ளும் விவேகிகள் இல்லையா! ஏன் அவர்களெல்லாம் ஒன்றுகூடி, இந்தப்படையெடுப்பு கூடாது, இதனைத் தடுத்தாக

(5-ம் பக்கம் பார்க்க)

## வனஸ்பதி

4-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்றுகூறக்கூடாது? நாட்டைச் சுரண்ட ஒரு கூட்டம் இருப்பது, அக்கூட்டம் கதர் அணிகிறது என்ற காரணத்துக்காக, அதனை அனுமதிப்பதா? ஆள்வதுயார்,? நாட்டை மீட்டிட நானாவிதமான கஷ்ட நஷ்டப்பட்ட தோழர்களா, அல்லது பிர்லாக்கூட்டமா? பிர்லாக் கூட்டத்துக்கு, வேட்டைக்காடு தயாரித்து, அதற்குத் தேசிய வேலி அமைத்துத்தரவா, இத்தனைபாடும் பயன்படவேண்டும்!

"பயங்கரமானபாம்பு,ஒருமனிதனின் உடலைச் சுற்றிக்கொண்டால் அவன் எப்படித் திகைப்பான், அவன் முகத்திலே பாவம் (பா-டி, கே. சிமுறை) எப்படி இருக்கும் என்பதைக் கண்டு கொள்ள அருமையான சந்தர்ப்பம்வாருங்கள்! வாருங்கள்வந்து பாருங்கள்! இந்தக்காட்சி,அபூர்வமானது" என்று அழைக்கிறார் காட்சிச்சாலை விளம்பர அதிகாரி.

காட்சி மேடையிலேயோ, காணச் சகியாத காட்சி.பாம்பு ஒருவன் உடலைச் சுற்றிக்கொண்டு, வதைக்கிறது. இந்த வதைபடும் காட்சியைக் காணக் கட்டணம் செலுத்தினர்களல்லவாசிலர், அந்தப் பணத்தைக் காட்டி, காட்சிச்சாலை விளம்பர கர்த்தா, களிப்புடன் கூறுகிறார், "மனிதன் பாம்பிடம் சிக்கிவதைகிறானே! மகா பாபமல்லவா! எப்படி ஐயா! மனம் வந்து இத்தக்காட்சிக்கு இடமளித்தீர்கள், தகுதியா, முறையா?" என்று கேட்கிறீர்களே, நான் இப்படி ஒரு காட்சியை ஏற்பாடு செய்ததால்தானே 'பணம்' கிடைத்தது, என்று கூறிப்பூரிக்கிறார்.

காட்சிச்சாலையின் பெயர் வனஸ்பதி! விளம்பரகர்த்தா வேறுயாரும் அல்ல, நமது மாகாண முதலமைச்சர் ஆந்திர கேசரி, பிரகாசம்காருதான்!

இந்நாடு — திராவிடநாடு— சென்னைமாகாணம் — தொழில் துறையிலே, மிகமிகப்பின்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது— மறுக்கவில்லை.வடநாட்டுவாணிப வேந்தர்கள், இங்கு தமது திறமை, வசதி ஆகியவற்றை உபயோகித்து, பெரியதோர் செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்டனர்.

பெரிதும்நம்மவர்களேகாணப்பட்ட, வியாபார இடங்களெல்லாம் இன்று வடநாட்டவரிடம் சிக்கிக் கொண்டன.

சென்னையிலே, வியாபாரம் மிகுந்த பகுதியின் பெயரே, இப்போது, சௌகார்பேட்டை— அல்லது—குஜராத்திப் பேட்டை என்றாகிவிட்டது. வைரம்முதற்கொண்டு வளையல் வரையிலே, இரும்பு முதற்கொண்டு இனிப்புப்பண்டம் வரையிலே, வடநாட்டவர் விற்கத் தொடங்கி, இங்கே, தொழில்வளம் வறண்டுவிடும் நிலையை உண்டாக்கிவிட்டனர்.

வெள்ளை ஏகாதிபத்யமே கூட இங்கு வியாபாரக் கோலத்திலே தான் நுழைந்தது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள். கடை முதலில், கொடி பிறகு! அங்காடி வைத்தனர் ஆரம்பத்தில், பிறகோ ஆட்சி ஏற்படுத்தினர்,ஆங்கிலர். அந்த "ஆதிபத்யத்தை" ஒழிக்கவே, குமரனின் மண்டை உடைந்தது, வீரத்தமிழன் சிதம்பரம்பிள்ளையின் சொத்து ஒழிந்தது, காசிராஜனும், ராஜகோபாலனும், தூக்கு மரத்தருகே போய்த் திரும்ப வேண்டி நேரிட்டது; ஆயிரக்கணக்கிலே வாலிபர்கள் சிறை புகவேண்டிவந்தது.

மான்செஸ்டர், லங்காஷயர், ஷெப்பீல்டு, போன்ற பிரிட்டிஷ், நகரங்களின் ஆதிக்கம் ஒழிந்தது. அதனை ஒழிக்கும்நோக்கில் அந்த ஒழிப்பு வேலையில் மும்முரமாகநம்மவர் ஈடுபட்டிருந்த சந்தடியைச் சாக்காக வைத்துக்கொண்டு, வடநாட்டவர்நுழைந்தனர், தேசிய உடையில், காந்தியத்திரைக்குப்பின்புறமிருந்து.

இன்று பம்பாய், ஆமதாபாத், ஜம்ஷட்பூர் ஷோலாப்பூர் போன்ற, வடநாட்டு நகர்களுக்கு, "மார்க்கட்" சென்னை மாகாணம். இதனை விளக்க வேண்டிய சிரமம்இன்றி,இன்று எங்கும் வடநாட்டு விலாசம் பளிச்சென மின்னியபடிஇருக்கிறது. சுராஜ்மல்—பாபாலால்—டாட்டா—குப்தா—செல்லராம்—டால்மியா-கோயங்கா- பிர்லா—பஜாஜ்—ஜெய்ன்—என்று பல விலாசங்கள், இன்று நமதுபாமர மக்களுக்கும் தெரியக் கூடிய அளவு ஏற்பட்டு விட்டன.

இவ்வளவு 'செல்வாக்கு' இங்கு, வடநாட்டாருக்கு இருக்கிறது. வடநாட்டிலே, இது போல, தமிழரின் விலாசங்கள் உண்டா! இல்லை! ஏன்!தமிழனுக்குத்தான் விரிந்த உள்ளமாமே! அவன், யாதும் ஊரேயாவரும் கேளிர் என்று கூறிவிடுகிறான். கூற மறந்தாலும், தமிழ்த்தேனில் இழைத்து இதனைத் தந்துவிடத் திரு. வி. க. இருக்கிறார்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! என்று பாடல் படிக்கிறான் தமிழன்; பிறருதேடி ஓடுகிறான், 'சேட்டின்' கடைக்கு, எந்தச் சாமானுக்கும்.

வியாபாரத்தோடு, இந்தஆதிக்கம் நின்று விடவில்லை. உற்பத்தித்தொழிலே, ஒரு நாட்டின் உயிர்நாடி; அது இன்று பெரிதும் வடநாட்டவரிடம். பணத்தை, தேங்கி இருக்குமிடத்திலிருந்து பெற்று, தேவையான இடத்திலே செலுத்தும் தொழில், ஒரு உடலின் இரத்த ஓட்டத்துக்குச் சமானம், அது பெரிதும் வடநாட்டவரிடம். தமிழன், உயிர்நாடி, இரத்தக்குழாய் இரண்டையும், வடநாட்டவரிடம் ஒப்படைத்த விட்டு, 'வாழ்வாவதுமாயம்' என்று வானைநோக்கிப் பாடியபடி இருக்கிறான். இதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டிய காலம், வந்து கொண்டே இருக்கிறது—எட்டிப்பார்க்கிறது.

பணப்பெருக்கத்தின் வேகம் குறைந்துவருகிறது.கள்ளமார்க்கட்டின் வாடிக்கைக்காரர்கள் கூட, காசை முன்புபோல அள்ளிக் கொடுக்காமல், எண்ணிக் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். இன்னமும் "இலாபம்" வறண்டு விடவில்லை என்ற போதிலும், இலாபத்தின் வேகமும் அளவும் குறைகிறது; ஐந்தாறு ஆண்டுகளிலே, பணப்பெருக்கம் என்பது பழங்கதையாகிவிடும். இலாபம், தேடவேண்டிய பொருளாகிவிடும், அப்போது, வடநாட்டு ஆதிக்கத்தால் ஏற்படும் வலி நன்றாகத் தெரியும். நாம் முன்கூட்டிச் சொல்கிறோம்; அதனைப்பிறகு, நம்நாட்டுக் கடைவீதியினர் கூறத்தான்போகிறார்கள்.

ஒரு நாட்டின் வாழ்வு, மற்றோர் நாட்டின் பொருளாதார சக்கரத்திலேபிணைக்கப்பட்டுவிடுவது சாதாரண விஷயமல்ல! கைதியின் நிலை! அந்தநிலை, திராவிடத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

வறண்ட நாடாகவும்,தொழில் திறமற்ற நாடாகவும் தொழிலுக்கு 'முதல்' போட "ஆசாமிகள்" இல்லாத நாடாகவும் தொழிலுக்குப் பாட்டாளிகள் கிடைக்காத இடமாகவும் இந்நாடு இருந்து, இதுபோலவேறு இடத்து ஆதிக்கம் ஏற்பட்டிருந்தால்கூட, நாம் வருந்தப் படக்காரணம் இராது.

காவேரி தென்பெண்ணை கோதாவரி கிருஷ்ணா போன்ற ஜீவநதிகள் இங்கு. ஜீவநதிகள் என்றால் அவைவெறும் பாவத்தைப்போக்கும் விசேஷ தீர்த்தம் என்றுபொருள்? விவசாயத்துக்கு, வள்ளல்! அது மட்டுமல்லவே. எந்த மின்சாரசக்தி தற்கால விஞ்ஞானத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற கருவியோ, அந்த மின்சாரத்தைவாரி அளிக்கும் வல்லமை இந்த ஆறுகளிடம் இருக்கிறது, இன்று நாம், அந்த வல்லமையைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. நமது காடுகள் இயற்கையின் எழிலுக்கும் அதைக் காணும் கவிகள், ஓவியர் ஆகியோருக்குக் கற்பனைத் திறனைக் கிளறிவிடும் இடம் மட்டுமல்ல, அவைநமக்கு தொழிற்றுறைக்குத் தேவையான பொருளைத்தரும் களஞ்சியம். இன்று வரைநாம் அதனைப்பயன்படுத்தவில்லை. நமக்குச் சுரங்கங்கள் உள்ளன. புதைபொருட் செல்வத்தை நாம் சரியாகப்பயன்படுத்தவில்லை. ஏறக்குறைய நாறு கோடிமக்கள் உள்ளனர், அவர்களில் பலப்பல இலட்சங்களை, பர்மாக்காட்டுக்கும் மலேயா மண்ணுக்கும் பலிகொடுத்துவருகிறோம். இவ்வளவு இருப்பதுடன், வெளிஉலகுடன்தொடர்பு கொள்ள, கடலோரம் மூன்று பக்கம்; இவைகளிலே மறைந்த வைரம் மங்கியவையும் போக மீதமுள்ள துறைமுகங்கள் அனேகம். இவ்வளவு இருந்தும் நாம் காண்பதென்ன, ராஜபுதனப் பாலைவனத்து நம்பிக் காரர்களும், வறட்சிமிக்க வடநாட்ட

வரும் இங்கு "முதலாளிகள்" ஆகிவிட்டதைத்தான்; பிர்லாக்களின் படையெடுப்புகளைத்தான் காண்கிறோம்.

●

ஓர் நற்செய்தி!

## இளம்பிறை

(மாதவெளியீடு)

கவர்ச்சிமிக்க மூவர்ண அட்டைப் படத்தடன், வெள்ளைக் காகிதத்தில் பதிப்பிக்கப்பட்டு துல்ஹஜ்பிறை 1, (அக்டோபர் 27ந்தேதி) யிலிருந்து வெளி வரும். முதல் புத்தகத்திலே, யோகிசுத்தானந்த பாரதியார், கே. எ. பி. விஸ்வநாதன், எஸ். சோமசுந்தர பாரதியார், அல்ஹாஜ், பா. தாவூத்ஷா, பி, ஏ., ஆர். பி.எய். கனி. பி.ஏ.பி.எல்., பண்டிட் ஹுசேன், இன்னும் பலரின் எழுத்தோவியங்கள்நிரம்பப்பெற்றிருக்கின்றன.

தனிப்பிரதி அணா 8,
வருடசந்தா ரூபாய் 6,
சிலோன் 60 சதம்,
வருடசந்தா ரூபா 7.
V.P. கிடையாது.

எங்கும் விற்பனையாளர்கள் தேவை!

விபரங்களுக்கு:—

நிர்வாக ஆசிரியர் "இளம்பிறை"
பால்ய முஸ்லிம் அசோஸியேஷன்,
காரைக்கால். (F. I.)

## நாட்டார் வாசகசாலை.

முதலாண்டுவிழா நிதிவசூல்

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் அரும்பெருந் தொண்டாற்றிப்புகழ்பெற்றக் காலஞ் சென்ற நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நினைவாக ஏற்படுத்தியுள்ள வாசகசாலையின் முதலாண்டு விழாவைச் சிறப்புற நடத்தி, அவரது தொண்டினைத் தமிழகம் மறவாதிருக்க வேண்டிச் செய்யப்படும் இப்பணிக்குத் தமிழ்ப்பெரு மக்கள் தக்க பொருளுதவி செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்

இங்ஙனம்

**வாசகசாலைநிதிக்கமிட்டியார்.**

நிதி அனுப்பும் விலாசம்:—

R. V. துரைராசன்
காரியதரிசி
ந. மு. வே. நாட்டார்வாசகசாலை
3, பொன்னகரம்
மதுரை,

## "தொழிலாளர் மித்திரன்"

காரைக்காலில் நமது 'மித்திரன்' அச்சிடவேண்டி இருப்பதால், தென்னிந்திய இரயில் வேலைநிறுத்தம் காரணமாகக் குறித்த தேதியில் வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம். 29—9—46-லிருந்து தவறாமல் வெளிவரும்.

மானேஜர்
தொழிலாளர் மித்திரன்
பாண்டிச்சேரி.

# ★ ரங்கோன் ராதா ★

சௌமியன்.

உயிருக்கு ஆபத்துவரும் என்று எவனே ஒரு சோதிடன் சொன்னதைக்கேட்டு, மருண்டு போனதாகவும் அந்த மருட்சியின் காரணமாகவே, என்கணவனைத் தன்புருஷனாக்கிக் கொள்ளத் துணிந்ததாகவும் என் தங்கை என்னிடம் சொன்னதுகேட்டு நான் சிரித்தேன். சிரித்தேனே தவிர கொஞ்சம் பரிதாபமும் பிறந்தது. போடி! "பைத்யக்காரப்பெண்ணே!" என்று கேலிசெய்தேன். அவளோ திருப்தி பெறவில்லை. சோகத்துடனேயே பேசலானாள். "அக்கா! சோதிடன் குறிப்பிட்ட ஆபத்திலிருந்து தப்புவதற்கும், அத்தானைக் கலியாணம் செய்துகொள்வதற்கும் என்ன சம்பந்தம் என்று நீகேட்கவில்லையே ஏன்? அது உனக்கு ஆச்சரியமாக இல்லையா?" என்று தங்கம் கேட்டாள். நான் எவ்வளவு அசடுபார் தம்பி! நானாக்கேட்டிருக்கத்தானே வேண்டும் அந்தக் கேள்வியை? கேட்க வேண்டுமென்ற தோன்றவேஇல்லை. அவள் தான் கிளப்பிய கேள்விக்குத் தானேபதிலும் கூறிவிட்டாள்.

"அக்கா! கன்னிகழியாமல் நான் இறந்து போனால் குடும்பத்துக்கு ஆகாது. ஆகவே இறந்து போகு முன்பு, கலியாணம் செய்துகொண்டாகவேண்டும். வேறு யாரையேனும் மணம்செய்துகொண்டு, அவர்கள் மனதை உடைக்கநான் இஷ்டப்படவில்லை. அத்தான் கொஞ்சம் அழுத்தமான நெஞ்சுள்ளவரல்லவா! நான் இறந்துபோனால் அவர் சகித்துக் கொள்ளமுடியும். மேலும் நீ இருக்கிறாய். ஆகவே தான், நான் அத்தானைக் கலியாணம் செய்து கொள்ளத் தீர்மானித்தேன். இதைநீ நம்பினாலும் சரி, நயவஞ்சகம் என்று ஒதுக்கினாலும்சரி, எனக்குக் கவலை இல்லை. என்கவலை எல்லாம், இறக்கும்போது நான் கன்னியாக இருந்து, குடும்பத்துக்கு நாசம் ஏற்படும்நிலை வரக்கூடாது என்பதுதான்" என்று சொன்னாள்; இரண்டோர் சொட்டுக் கண்ணீர் என்விழிகளிலே இருந்து கிளம்பிற்று. ஒரு இளம்பெண்—சொந்தத்தங்கை—அவள் எவ்வளவு கெட்ட நினைப்புக் காரியாகத்தான் இருக்கட்டும், அவள், தான்சாகநேரிடும் என்று தன் வாயாலே கூறினால், எட்டடி அதைக் கேட்டுச் சகிக்கமுடியும். தங்கமோ அசடல்ல, புத்தி உள்ளவள், புத்திக்கூர்மை, என்வாழ்வையே துளைக்குமளவு இருந்தது அவளுக்கு. அவள் பெயரைச் சொன்னாலே எனக்கு ஆத்திரம் பிறக்கும் இருந்தும், அன்று அழுகுரலில் அவள் சொன்ன 'சேதி' கேட்டபோது என்மனம் என்னமோ, பாகாகிவிட்டது. என்ன கூறியாவது அவளைத் தேற்றவேண்டும் என்று துடித்தேன். என்மனதிலேயேஇரண்டு வகையான எண்ணங்கள் ஏககாலத்திலேகிளம்பித்தீரவேண்டியநிலை. அவளுக்குத்தைரியம்தர என்ன கூறுவது என்று யோசிக்கவேண்டி இருந்தது; அதே சமயத்திலே, அவள் கூறுவது உண்மையா, நடிப்பா; நடிப்பாகவும் உண்மையாகவும்இல்லாவிட்டால் ஒரு சமயம் அவளையாராவது சோதிடன் உண்மையிலேயே ஏமாளியாக்கி விட்டானா! அப்படியும் இருக்குமானால், சோதிடன் தானாகவே இக்காரியத்தைச் செய்தானா, அல்லது யாராவது தூண்டிவிட்டார்களா? ஒரு வேளை, என்கணவரே, இதற்கும் காரணமோ? ஏனெனவது சோதிடனைஏவிவிட்டுத் தங்கத்தின் மனதிலே, பயத்தைத்தூவவைத்தாரோ! அவர் எதற்கும் துணிந்தவராயிற்றே. தன்காரியத்தைச் சாதித்துக்கொள்ள எதையும் செய்யக்கூடியவராயிற்றே. அவர் மட்டுமா! பெண்கள் விஷயத்திலே, ஆடவரில் பெரும்பாலோர் இப்படித்தானே நடந்துகொள்கிறார்கள். உத்தமபுத்திரர்கள் கூட, இந்த ஒருவிஷயத்திலேமட்டும் ஏனோ, எவ்வளவு தலைகீழ் வாதம்புரியவும், தகாதமுறையைக்கையாளவும் எண்ணம் பிறக்கிறது. தர்மத்தின் காவலரென்றும், சாது சன்மார்க்கி என்றும் பெயரெடுத்த தர்மபுத்திரர்கூடதிரௌபதி விஷயத்திலே, எப்படி நடந்துகொண்டார். ஆணழகன் அர்ஜுனனை அடைந்தோம், வில்வீரன் விஜயன் நமக்கு மாலைஇட்டான், இனி நமக்கு இன்பவாழ்வுக்கும் கௌரவத்துக்கும் என்னகுறை என்றுதானே திரௌபதை எண்ணி இருந்திருப்பாள். இதனை, எவ்வளவோ நுட்பமான தத்துவங்களை எல்லாம் ஆராய்ந்தறியும் ஆற்றல் படைத்ததர்மர் தெரிந்துகொண்டிருக்க மாட்டாரா! ஆனால் என்ன செய்தார்! தம்பிக்கு மட்டுமல்ல. தனக்குமல்லவா, திரௌபதையைத் தாரமாக்கிக் கொண்டார். கர்ப்பிணியைக் கானகத்துக்குத் துரத்திய இராமனை, மகாவிஷ்ணுவின் அவதாரம் என்றல்லவா கூறுகிறார்கள். அப்பா! பெண்கள் விஷயம் என்றாலே, உத்தமர்கள், தத்துவம் தெரிந்தவர்கள் தபோதனர்கள், திரு அவதாரம் செய்பவர்கள், என்பவர்களெல்லாங்கூடத் தவறு செய்தே இருக்கிறார்கள்.

ரங்கோனில் ஒருநாள் ஒரு வேடிக்கை நடந்தது கேள். நாயுடு இங்கே இன்று துன்புறுத்தினாரல்லவா, அது போல் அங்கேயும் செய்வதுண்டு. ஆனால் சில சமயங்களிலே, தந்திரமாகவும் நடப்பார். ஒருநாள், 'குஷாலாக' இருக்கப்பணம் தேவைப்பட்டது. கேட்டார், இல்லைஎன்றேன். உண்மையிலேயே இல்லை. ஆனால் அவர் தன் நண்பர்களிடம்வாக்களித்தார் போலிருக்கிறது; ஆகவே, என் கழுத்துச் சங்கிலியைக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தினார், அடகு வைக்க. நான் மறுத்தேன். அவர் கோபித்துப்பார்த்தார். நான்பிடிவாதமாகவே இருந்துவிட்டேன். என்ன செய்தார் தெரியுமோ? பாசாங்கு! பேசாமல் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, முகத்தைக் கரங்களால் மூடிக்கொண்டு தேம்பலானார். கொஞ்சநேரம் அதனைக் கவனியாமல் இருந்து பார்த்தேன் முடியவில்லை. இதென்ன சனியன்! ஏன் அழுது தொலைக்கிறீர்கள்! என்று கேட்டேன். ஒன்றுமில்லை - உனக்கென்ன — என் விதி—விட்டவழிப்படி நடக்கட்டும்— என்று பலப்பல கூறினார். நெடுநேரத்துக்குப்பிறகு "ரங்கம்! இன்றுஒரு பெரிய ஆபத்திலே சிக்கிக்கொண்டேன். ராதா, ஒரு முகம்பார்க்கும் கண்ணாடி கேட்டது. அதைவாங்கக் கண்ணாடிக்கடைக்குப் போனேன், அங்கே ஒரு அருமையான பெரிய நிலக்கண்ணாடி, நாலுஅடி உயரம் இரண்டடி அகலம் இருந்தது; அதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அதுஒரு அலங்காரப் படிக்கட்டின் மீது வைக்கப்பட்டிருந்தது. நான் அதனைச் சரியாகக் கவனிக்காமல், அந்தப்படியைப் பிடித்துஇழுத்துப்பார்த்தேன். கண்ணாடிகீழே விழுந்து நொருங்கி விட்டது. பயத்தால் நான் அசைவற்று நின்றேன். கடை ஒரு பர்மாக்காரனுடையது. அவன் தீப்பொறிபறக்கும் கண்களுடன் என்னை நோக்கி வந்தான். கும்பிட்டேன் கூத்தாடினேன். 300-ரூபாய் தந்தாக வேண்டும், எடு என்றான். இன்று இரவு கொடுத்துவிடுகிறேன் என்று சத்யம் செய்துவிட்டுவந்தேன். நாளைக் காலையிலே அவனுடைய கத்திக்கு நான்பலியாகவேண்டும். என் விதி அப்படி இருக்கும் போது, என்ன செய்வது!" என்று கூறிக் கோவென அழுதார். மறுவார்த்தை பேசாமல், சங்கிலியைக் கழற்றிக்கொடுத்தேன். பத்துநாட்களுக்குப் பிறகே, அவர் அன்று சொன்னது பொய்என்பது தெரிந்தது. வருத்தப்பட்டேன். வயிறு எரிந்து திட்டினேன். மறுஇரவு நாங்கள் மூவரும் நாடகம் பார்க்கச்சென்றோம். வள்ளிகல்யாணம். தமிழ்நாட்டுப் பிரபலநடிகர்கள் என்றவிளம்பரம் அன்று நல்லவசூலைக் கொடுத்தது. நாடகத்திலே, முருகன், வேடுவப்பெண்ணை யானையைக்காட்டி மிரட்டும் காட்சி நடக்கும் போது, நாயுடு, என்னைக் குறும்புத்தனமாகப் பார்த்துச்சொன்னார், 'ரங்கம்! என்மீது பிரமாதமாகக் கோபித்துக் கொண்டாயே, இதோபார், சாட்சாத்முருகன் கூடத்தான், யானையோ பூனையோ, எதையோ காட்டி, எதைப்பற்றியோ பேசி, வள்ளியைத் தன்வழிக்குக் கொண்டுவருகிறார், இது சகஜமான காரியம்'' என்றார். உண்மைதான், ஆண்களே அப்படித்தான் என்று அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன். உன் அப்பாவோ சுபாவத்திலேயே தந்திரக்காரர், அதிலும் சுயநலம். எனவே; எவனையாவது சோதிடனைத் 'தயார்செய்து' தங்கத்தின் மனதிலே மரணபயம் ஏற்படும்படி செய்திருப்பாரோஎன்றுஎண்ணினேன்.

இப்படி இரண்டு வெவ்வேறுவிதமான எண்ணங்களை ஏககாலத்திலே கொண்டதால், தெளிவான நிலையே கெட்டுவிட்டது. வீண்பயம்—பைத்யக்காரத்தனம்—சோதிடம் முழுப்பொய்—இதை எல்லாம் நம்பாதே— என்று ஏதேதோ கூறினேனே தவிர, தங்கம் தந்த தகவலை மறுத்துக்கூற என்னால் முடியவில்லை. என் தங்கையின் உயிருக்கு ஆபத்து என்று அவளே கூறிடக்கேட்டால் என்னதான் பகையிருந்தாலும், மனம்பதறாதா! தங்கம் என் குழப்பத்தைத் தெரிந்துகொண்டாள்.

நான் அவள் விஷயமாகப் பரிதாபப்பட்டேனே தவிர, எப்படி என் கணவரை அவளுக்கு மணமுடிக்க மனம் வரும். எனவே நான் வேறு ஏதேதோ பேசி அவளுடைய கவலையைப்போக்கப்பார்த்தேன். அவளும் என்னை வற்புறுத்தவில்லை. கொஞ்சநேரம் சென்றதும், வேலைக்காரியை வண்டி கொண்டுவரச்சொல்லி, நான் வீட்டுக்குப்புறப்பட்டேன். வாசற்படி வரைவந்து, என்னைத்தங்கம் வழியனுப்பிவைத்தாள்.

வம்புபேசின அந்தச் சோதிடனைக் கண்டுபிடித்து, அவனைத்தூண்டிவிட்டவர் உன் அப்பாதானா என்பதைக் கண்டறிய வேண்டுமென்று ஆசைகொண்டேன். ஆனால், நேரமாகிவிட்டது. லேடிடாக்டர்லாசரஸ்வீட்டுக்கு வந்திருப்பார்களே என்ற எண்ணம் வேறு. எனவே சோதிடன் விஷயமாகப்பிறகு பார்த்துக்கொள்வது என்று தீர்மானித்து, நேரேவீட்டுக்குச்சென்றேன். உள்ளே நுழையும்போதே, முன்பு கொண்டிருந்த எண்ணத்தின்படி, அவரிடம் மல்லுக்கு நிற்பது என்ற துணிவுதான். அவர் தான், சோதிடனைக்கொண்டு தங்கத்தையும் ஏய்த்திருக்கவேண்டும் என்ற எண்ணமும் குடிபுகுந்ததால், வலியவேனும் சண்டைக்கு நிற்பது என்ற எண்ணம்மேலும் வலுத்தது.

"வாங்கோ! என்னம்மா, நம்மை, இப்படி காக்கப்போட்டுப் போட்டிங்க" என்று லாசரஸ்கேட்டார்கள். லேடிடாக்டர் ஒருநாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர் உலவிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் சீறிவிழுவார், உடனே நாமும் பதிலுக்குப்பதில் சுடச்சுடத் தருவது என்று நினைத்தேன். "லேடிடாக்டரை இங்கே வரச்சொல்லிவிட்டு, எங்கேபோய்விட்டாய்? அந்த அம்மாள் வந்து எவ்வளவு நேரமாயிற்று? இப்படியா அவர்களைக் காக்கப்போடுவது" என்று கேட்பார். அலட்சியமாக ஏதேனும் அதற்குப் பதில் கூறவேண்டும். என்று நினைத்தேன். ஆனால் அவரோ நான் எதிர்பார்த்தபடி ஒன்றும் கேட்கவில்லை. அதற்குமாறாக, லேடிடாக்டரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே போய்விட்டார். நான், லாசரசிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். லேடிடாக்டர் பிறகு என்னைப்பரிசோதித்து, உடம்புக்கு ஒன்றுமில்லை. ஆனால் சுகப்பிரசவத்துக்காகத்தக்க மருந்தை இப்போதிருந்தே தந்துவிடுகிறேன், சாப்பிட்டுக்கொண்டிருங்கள் என்று அன்புடன்கூறிவிட்டுச் சென்றார்கள்.

வெளியே போனவர், இரவுநெடுநேரத்துக்குப்பிறகே, வந்தார். எனக்குத் தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டுகொண்டுதான் இருந்தேன். அவர் கதவைத்தட்டினதும், பழைய வழக்கம் காரணமாகச்சரேலெனஎழுந்தேன், போய்க்கதவைத்திறக்கவேண்டுமே என்று. ஆனால் அறைவாயற்படி வரை சென்றதும், நான் கையாள வேண்டிய புதியமுறை கவனத்துக்கு வந்தது; உடனே வேலைக்காரியை அதட்டிப், போய்க்கதவைத் திறக்கச் சொல்லிவிட்டு, நான் படுக்கை அறை சென்றேன், கதவைத் தாளிடவில்லை.

(தொடரும்)


## காஞ்சிபுரம் டிஸ்டிரிக்ட்முன்சீப் கோர்ட்டில்

O. S. 364 of 1946
2A 742 of 1946.

வாதிகள்
1. ஆதிநாராயண முதலியார்
2. வடிவேலு முதலியார்

பிரதிவாதிகள்
ஸ்ரீ ஏகாம்பரநாதர்
தேவஸ்தானம் டிரஸ்டிகள்.
& Another.

ஷை நெம்பரில் வாதிகள் தங்களுக்காகவும் ஸ்ரீஏகாம்பரநாதர் ஸ்வாமி தேவஸ்தானத்தில் அக்கரையுள்ள சேவார்த்திகளுக்காகவும் தர்மகைங்கரியம் செய்பவர்களுக்கும் பிரதிநிதிகளாக இந்தத்தாவாசெய்கிறதை அங்கீகாரம் செய்யவேணுமாய்மனுக் கொடுத்து கோர்ட்டிசு உத்தரவாகி23-9-1946தேதிக்குவாய்தா போட்டிருக்கிறது.

காஞ்சிபுரம், 19–9–46.

N. S. பாஷியம் அய்யங்கார்
வாதிகள்வக்கீல்.


## அடுத்த இதழில்

அடுத்தஇதழில், பெரியார்விழா, தோழர் சம்பத், திருமண நிகழ்ச்சிகள் வெளிவரும்.

## வீடு இல்லா மக்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

குடிஏறினவர்கள், அங்கு, சமயல்செய்து சாப்பிடமுடியாதபடி திண்டாடி, விளக்கு இல்லாமல் இருட்டில் நடமாடிவதையவேண்டுமாம்! இந்தக் கைங்கரியத்தின் மூலம், குடி இருக்க இடமில்லாதார், கையாளும் போக்கைவீழ்த்திவிடலாம் என்று, மந்திரி பேவான் எண்ணுகிருர்.

''இல்லாமை' எனும் நோய் இருக்கும்வரையில், நாளாக நாளாக இத்தகைய இயக்கங்கள் வளருமே ஒழியக்குறையாது. அதிலும், மக்களின்வாழ்வுக்கு அடிப்படைத் தேவைகளான, உணவு, உடை, விடுதி, இம்மூன்றுக்குமே, திண்டாட்டம்வந்துவிட்டால், பிறகு சட்டமும் சாந்தியும் நிலைத்திருப்பதும், அவைகளைநிலைநாட்டுவதும் சிரமமான காரியமாகத்தான் போகும்.

சீமையிலே, வீடில்லாதார், பலவீடு உடையாரின் உரிமைகளையோ, அந்த உரிமையைப் பாதுகாக்கும்பொறுப்புக்காகச் சர்க்கார்வகுத்திருக்கும் சட்டத்தையோ, மதிக்கவில்லை; மீறினர். இந்தமனப்பான்மை, சாதாரணமாக, சீமைபோன்ற சட்டமெருகு ஏறிய பட்டினங்களில் ஏற்படக்கூடியதல்ல—ஏற்பட்டுவிட்டது. இந்த மனப்போக்கு ஏற்படக்காரணம்என்ன? வாழ்க்கையின்மூன்று அத்யாவசியமான தேவைகளையும், பெறுவதற்கு மனிதனுக்கு உரிமை, இருக்கிறது, அவைகளை மனிதன்பெறச் செய்யவேண்டிய பொறுப்பு, சர்க்காருடையது. சர்க்கார், அந்தப்பொறுப்பை உணர்ந்தே சட்டம் செய்யவேண்டும். அத்தகைய சட்டமே நிரந்தரமாகவும், நிலைத்தும் இருக்கும். மற்றவை, விளைவு என்ன ஆகுமோ என்றபயம் மக்கள் மனதிலே இருக்குமளவுதான் நிலைக்கும், பிறகு சிதறிவிடும்; சிதறியபிறகு, செப்பனிடமுடியாது. மனிதனின் மூன்று தேவைகளை, சர்க்கார் ஆதீனத்தின் கீழ்வராத, வரிசெலுத்தாத, கோர்ட்டும் சிறையும், மந்திரியும் ராஜதந்திரியும், சட்டமும், விஞ்ஞானத் திட்டமும், பெருத, 'ஜீவன்கள்' பெற்றுள்ளன. மகுடம் ஜெபமாலை, அரண்மனை ஆலயம், எனும் ஜொலிப்புகளைப்பெற்ற பிறகும், மனிதன் இம்மூன்று அடிப்படைத்தேவைகளைப்பெற முடியாமல் இருக்கிருன். அவனைச் சுமைதாங்கியாக்கவா, சட்டங்கள்!

குடி இருக்கஇடம் கேட்டால் இல்லை என்கிருயே, இதோ பார், நாங்கள் கண்டுபிடித்து விட்டோம் குடி இருக்கஇடம்! —என்று கூறுகின்றனர் சீமையில் சிலர். சட்டம் சும்மா விடாது! என்று சீறுகிறது சர்க்கார். தண்டிக்கும் என்பது, அவர்களுக்கும் தெரியும்! ஆனல் அந்தத்தண்டனை, இப்போதுள்ள கொடுமையை விடக் குறைவு என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். இப்போதுள்ள கொடுமை, குடிஇருக்கஇடம் இல்லாதது! தண்டனை, ஜெயிலாகஇருக்கும்; அதாவது குடிஇருக்கஇடம்!! சர்க்கார் செலவில்!!

'அதிகம்' ஒருபுறமும் "இல்லாமை" மற்ருேர்புறமும் இருக்கும் நிலைமையை இனிமக்கள் சகிக்க மாட்டார்கள், என்பதைக் காட்டும் 'சிறு ஜாடை' தான், சீமைச்சம்பவம். சீமையிலேயே இது என்ருல், மற்ற இடங்களிலே உள்ள மக்களின், மனதிலுள்ள அதிருப்தி எனும் எரிமலையினின்றும், கிளர்ச்சி எனும் நெருப்புக்குழம்பு வெளிப்பட்டால் என்ன ஆகும்!

இங்கே, பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான இடமில்லை, ஆஸ்பத்திரிகள் சேர்ந்தார்ப்போல் நூறுநோயாளிகள் தங்கும் அளவு இடவசதியோடு இல்லை; நொண்டியும் நோய் பிடித்தோனும், குருடனும், கூனனும், கைபோனவனும் வேறு உறுப்பு கெட்டவனும் பாதையிலும்படிக்கட்டிலும்வீதி முனையிலும், வெட்டவெளியிலும் உழல்கிருன். தாயுமானர் தந்தையுமானர், சடைஉடையார், இருபாகம் தேவி உடையார். பள்ளிகொண்டார், பார்த்தசாரதி, வரதர் வேங்கடர், வரசித்தி, முக்தீசர், என்று எண்ணற்ற நாமமுடைய எம்பெருமான்களின் இருப்பிடங்கள்உள்ளன எங்கு நோக்கினும், பல ஏகர் விஸ்தீரணங்களைக்கொண்டதாகவும், நூற்றுக்கால் ஆயிரங்கால்மண்டபம், கலியாணமண்டபம், கார்த்திகைமண்டபம், திருக்குளம், திருஉலாஇடம், தோட்டம் முதலியவற்றுடன். என் இந்த "இடங்கள்" இடமில்லாதாருக்கு இடமாகக் கூடாது! சர்ககார், இதனைச் செய்வதன்ருே, முறை!

நமது நாட்டிலே உள்ள ஒவ்வொரு பெரிய கோயிலும், ஒரு "உயர்தரப்பாடசாலை" க்குஏற்ற இடமாக, அற்புதமாக அமையும்! அங்குள்ள, சித்திரமண்டபங்களை, ஓவியக்கல்லூரிக்குஇடமாக்கலாம்; தோட்டங்களை, விவசாய மாணவர்களிடம் ஒப்படைக்கலாம்; திருக்குளங்கள் மாணவர்களின் பொழுதுபோக்கு விளையாட்டுக்குததரப்படலாம், பிராகாரங்கள், அனதைகளின்வீடுகளாக்கப்படலாம். வெட்ட வெளிகள், விளையாடும் மைதானங்களாகலாம், மூலக்கிரஹத்திலே மூலவர் இருந்துகொண்டு, தன்னைச்சுற்றித் தன் தனயர்கள் இருப்பது கண்டு மகிழ்வார், பெருமை அடைவார்; வைதீகர்கள் எண்ணுவதுபோல, சோகிக்கவுமாட்டார், சபிக்கவு மாட்டார்; அந்த நல்லறிவு உதிக்குமா!

ஒருமடம்! அதிலே இருந்த அதிபதி, ஓடிவிட்டார். போகிற போக்கில் கொஞ்சம் பொருளும் எடுத்துச் சென்ருர். பிறவிப் பெருங்கடலைக் கடக்க அவரிடம் 'சைவம்' என்ற தோணி இருந்தது. ஆனல், வடநாடு போக ரயில்தேவைப்பட்டது; பணம் எனும் தோணியை அதற்காகத்தான், பக்தர்கள் தந்த காணிக்கையின் உதவிகொண்டு தயாரித்துக்கொண்டார். மடாதிபதி ஓடிவிட்டபிறகு, அந்த மடத்துநிர்வாகப் பொறுப்பைப் பெற்றவர்கள், கூடினர். மடங்களின் நிலைமை, மடாதிபதிகளின் போக்கு ஆகியவைபற்றிப் பேசினர். பேசினதன்பலன் என்ன? இப்படிப்பட்ட "யோக்யதை"யை வளர்க்கும் இடங்கள் இருப்பானேன்; இந்த மடாதிபதிகளை வளர்க்கும் முறையையே விட்டு விடலாம், என்று முடிவுக்கு வந்தனரா! செச்சே! அப்படி எல்லாமா, சைவமெய்யன்பர்கள் முடிவு செய்வர்! போனவர் கெட்டவர்! புதிதாக ஒரு மடாதிபதியைப்பிடிப்போம்! என்றுமுடிவு செய்தனராம்.

அடுத்த பக்கம் பார்க்க




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-கெ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


## டில்லி சலோ!

தேர்தல் வெற்றிக்காக'டில்லி சலோ' என்ற வீரகோஷத்தை முழங்கியவர்கள் இன்று டில்லியை அடைந்து விட்டார்கள். கல்கத்தா, பம்பாய் தெருக்களிலேபிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தின் துப்பாக்கிக் குண்டுகளை மார்பில் தாங்கிய ஹிந்து-முஸ்லீம் தியாகிகள் எந்த டில்லியைக் கனவுகண்டு ஒன்றுபட்டு உயிர் நீத்தார்களோ அந்தடில்லி தேசிய விடுதலை, தேசிய ஒற்றுமை, தேசியவெற்றி மிளிர்ந்து கிடக்கும் டில்லி-யல்லயென்பது வெட்டவெளிச்சம்.

"பீல்ட்மார்ஷலின்" இராணுவக்கொடியைவேவல்உயர்த்திப் பிடித்திருப்பதையும், பிரதம சேனதிபதி இந்திய மக்களின் சரீரத்தில் துப்பாக்கியின் திறமையை பரிசீலனை செய்யத் தயாராய் இருப்பதையும், காட்சியளிக்கும் நகர்தான்இன்றைய டில்லி—தேசிய சரணகதி, தேசத்தின் ஒற்றுமையின்மை, தேசிய அவமானம் இவைகளடங்கிய டில்லி—ஆகத்தான் இன்னும் இருந்துவருகிறது. பிரதான தேசத் தலைவர்களின் தலைமையில் இடைக்கால சர்க்கார் அமைப்பதைப்பற்றி வைஸ்ராய் அறிக்கைமூலம் வெளியிட்டதை மிகப்பெரும் வெற்றியென தேசிய பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் வரவேற்ருர்கள். பரிபூரணமாகச் சுதந்திரம் வழங்கப்பட்டுவிட்ட தென்றும் சுதந்திர சகாப்தம் ஆரம்பமாய் விட்டது என்றும் போற்றுகிருர்கள்.

வளர்ந்து வரும் புரட்சியலையையும், மக்கள்போராட்டங்களையும் அடக்கி ஒடுக்குவதற்குகாங்கிரஸ் தற்காலிக அரசாங்கம் மேலும் மேலும் ஏகாதிபத்தியத்தின் ஆயுதமாகப்பேருய்க்கொண்டிருக்க நேரிடும் என்பதை அருவருப்புடன் தெரிந்து கொள்வார்கள். செப்டம்பர் 2-ம்தேதி 'தேசியம்' வெற்றி தினமாக இருந்தது. ஆனல் தேசியம் அடிபணிந்து, ஒற்றுமையின்மை அவமானம்முதலியவை அடங்கிய தினமாகத்தான் இருக்கும்.

[பீபிள்ஸ்வஜ்]




ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம் தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0

ஜெயராம் வைத்தியசாலை,

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!
80, 100-ங். நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.


## வீடு இல்லாமக்கள்

7-ம்பக்கத் தொடர்ச்சி

அதே ஊரில், பள்ளிமாணர்கள் தங்கி இருக்க ஒருவிடுதி. விடுதி போதவில்லை! இடமில்லாது இடர்ப்படும் மாணவர்கள் அதிகம். அந்தமாணவர்களின் விடுதியை விரிவுபடுத்தி, மாணவர்களின் வசதியைப் பெருக்கவேண்டுமென்று எண்ணங்கொண்ட விடுதி நிர்வாகம் பார்க்கும் தோழர், 'வினயமாக' சைவத்தின் மேன்மை மகிமை, தூய்மை ஆகிய எதனையும் குறை கூறாமல, நிறுபூசிய நெற்றியினைப்பார்த்துநேர்மையானவிண்ணப்பம் செய்தார் "பெரியீர்! மடாலயங்களின் போக்குமாசு நிறைந்ததாகி விட்டது பற்றி, இங்குபேசினீர். இனியும், இம் மடத்தைக் கட்டிஆள ஒருஅதிபதியைத் தேடுவது ஏன்? மாணவர்களின் விடுதிக்கு இடம் தேவை. மடத்தை மாணவருக்குத்தந்து அருளுமின்!" என்று கேட்டார்.

"அதற்கென்ன தோழரே! அங்ஙனமே ஆகுக!" என்றனரா! இல்லை!!

மடத்திற்கழகு மடாதிபதிஇருத்தல்! என்று முடிவு செய்தனர். புதிய அதிபதியைத் தேடிக்கொண்டு அவர்கள் இருக்கிறார்கள்; பழைய மடாதிபதி ஏதேனும் புதிய 'சத்காரியம்' கிடைக்குமா என்று வேறோர் திக்கிலே தேடிக்கொண்டிருக்கிறார்; விடுதி நடத்துபவர், மாணவர்களின் விடுதிக்குத்தக்க வேறோர் இடம் தேடிக் கொண்டிருக்கிறார்! இடம் இருக்கிறது மடத்திலே! இடம் தேடுகிறார்கள் மாணவர்கள்! அவர்களெல்லாம் இந்தச் "சீமைச் சேதியையும்" படித்திருக்கிறார்கள்!!

காலியாக இருக்கும் மடம், ஒருபுறம்!

இடம் தேடும் மாணவர் மற்றோர்புறம்!!

எங்கே இந்தத் திருக்கூத்து என்று கேட்கிறீர்களோ! முக்தி தரும் நகர் ஏழில் முக்கியமாம் காஞ்சியில்!!

வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுதவன் கதைபோல, மடம் இருக்க இடம்தேடி அலைவது ஏன்என்று மாணவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளும் நாளும், சீமைச்சம்பவத்தைக் கருத்திலே கொண்டு, ஏன்நாமும் அது போல் செய்யக்கூடாது என்று எண்ணும் நாளும், பிறவாமுன்னம், இந்நாட்டுச் சர்க்கார், இப்போது சீமைச்சர்க்கார் படும் திண்டாட்டத்தைக் கவனித்து, ஆவன செய்யவேண்டும் என்ற அவாவுடனேயே இதனை எழுதினோம். வேறொன்றில்லை பராபரமே!!

●

## திரிசடை—அண்ணாமலை

வாழ்க்கை ஒப்பந்தம்

காஞ்சிபுரம் திராவிடர் கழகச்செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களுக்கும் திரிசடை அம்மையாருக்கும் 11—9—46-ல் காஞ்சிபுரம் பங்கீட்டலுவலர் தோழர் கி. இராமலிங்கனார் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் எவ்வித சடங்குகளுமின்றிச் சிறப்பாக நடைபெற்றது.

மணவிழாவக்கு உள்ளூர்த் தோழர்களும் வெளியூர்த்தோழர்களும்இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வந்து சிறப்பித்தனர். திருமணத்தம்பதிகளைப் பாராட்டித் தோழர்கள் புலவர் வேணுகோபாலர், புலவர் கோவிந்தன், புலவர் தேவராசன் காஞ்சி கலியாண சுந்தரம் (தொழிலாளர் மித்திரன், ஆசிரியர்) செங்கற்பட்டு எம். சின்னய்யா, அ. க. தங்கவேலர், ஈழத்தடிகள் ஆகியோர்சொற்பொழிவாற்றினர். தனிப்பட்டவர்களும் கழகங்கள் சார்பிலும்பலவாழ்த்துரைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தோழர் அண்ணாமலை அவர்களின் குடும்பம் முழுவதுமே சுயமரியாதைக் கொள்கையில் அழுத்தமான பற்றுடையவர்கள். இப்போது தோழர் அண்ணாமலைக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்துள்ள திரிசடையம்மையாரின் தந்தையார் தோழர் பரசுராமனார் அவர்கள், 1928-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற மாகாண சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களைப் பின்பற்றிச் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து, இயக்கவளர்ச்சிக்காக இன்றுவரை, தொண்டு செய்து வருபவர்களில் முதன்மையானவர்.

தோழர் அண்ணாமலை அவர்கள் இயக்கத்தின் முழுநேர உழைப்பாளி. "சந்திரோதய" நாடகத்தில் வாஞ்சிநாதசாஸ்திரியாக நடித்து, நடிப்பின் உச்சநிலையை அடைந்து, பலராலும் புகழப்பட்டவர். இயக்க வளர்ச்சி ஒன்றுதான் இவருடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்பது மிகைப்படுத்திக்கூறுவதாகாது. வாழ்க தம்பதிகள் வளமெலாம் பெற்று.

—

## வீரகாவியம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்பதற்குப் பயந்துவிட்டார்கள். அதனாலேயே கண்ட பிராமணனையெல்லாம் சாமி என்று கும்பிட்டார்கள். அந்தப்பயம் தான் இனியும் 'சாமி' என்று கூப்பிடச்செய்கிறது. நாம் தனியாகயிருந்து தெய்வத்தைக் கும்பிட்டால் பிராமணப் பிள்ளைகள் செத்துப்போய்விடும். பின்தெய்வத்தைக்கும்பிடுகிறவனின் தலையை வெட்டினால்பிராமணப் பிள்ளை பிழைத்துக்கொள்ளும்! இதை இராமரே நடத்திக்காட்டினார்! அவரே நடத்திக்காட்டினமையால் அதைப் பின்பற்றி இந்து இராசாக்கள் அநேகம் தலைகளைவெட்டினார்கள். அந்தப் பயமும் சேர்ந்துசனசமூகத்தை முதுகெலும்பற்ற புழுக்களாக்கிவிட்டன. நமது கல்வி மந்திரியோ இனியும் இராமாயணம் படிக்கச்சொல்கிறார். அதிலிருந்து புது இந்தியாவைச் சிருஷ்டிக்கப்போகிறார். அந்தச் சிருஷ்டி இன்னும் உள்ள எலும்புகளையும் முறித்துவிடுமோ? அரிசியும் உளுந்தும் நெய்யும் மலிவடைந்தபின் அக்காரஅடிசலும் ஆமவடையும் அலைந்ததிரியுமோ? எல்லாம் பொறுத்துப் பார்ப்போம்.

## உங்களுக்குத்தேவையா?

திராவிடர் கழகக் கொள்கைகளைத் தாங்கி சுமார் எழெட்டு வருடங்களாக நடைபெற்று வரும் ஓர்வாரப்பத்திரிகைசுமார் ரூபாய் 2000 பொருமான அச்சுக்கூட சாமான்களுடன் விற்பனைகுத்தயார்.

சுமார் 2000 —பிரதிகளுக்கு "நியூஸ்பிரிண்ட்" கோட்டாவும், சர்க்கார், விளம்பரமூலமும், பிரபல ஆங்கில விளம்பர கம்பெனிகள் மூலமும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ரூபாய்—2000 நிரந்தர விளம்பர வருமானமும் உண்டு.

திராவிடர் கழகக் கொள்கைகளைத்தழுவி இப்பத்திரிகை எதிர்காலத்தும் நடைபெற வேண்டுமென்று விருப்பப் படுவதாலேயே "உங்களுக்குத் தேவையா?" என திராவிடத் தோழர்களுக்கும், பிரமுகர்களுக்கும் ஒரு சந்தர்ப்பமளிக்க விரும்புகிறோம்.

தேவையுள்ளவர்கள் தாங்கள் விரும்பும் தொகையைக் குறிப்பிட்டு எழுதவும்.

விபரங்களுக்கு :—

T. சிவஞானம்,
மானேஜர், யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிட். (ஜெகம் & கோ)
தெப்பக்குளம், P. O. திருச்சி.



தந்தி:- "புறாமார்க்" திருச்சி.





## தமிழ்த்திருமணம்

சென்னைத் திராவிடர் கழக உறுப்பினர் தோழர் சு தேவராசனுக்கும், தோழியர்குப்பம்மாளுக்கும், 8—9—46ல் தமிழர்முறையில் திருமணம்நடந்த போது பலதோழர்கள் வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர். அதன் நினைவாகமணமக்களால் "திராவிடநாடு" மலருக்கு ரூ. 2—8—0 அன்பளிப்புவழங்கப்பட்டது.



Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press. 317-319 Hodgsonpet, Conjeeveram.